## பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை
## 2008-09-ஆம் ஆண்டிற்கான கொள்கை
## விளக்கக் குறிப்பு

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை 1976 - ஆம் ஆண்டு நவம்பர் 6-ம் நாளில், 1973-ஆம் ஆண்டு திரு. வர்கீஸ் அவர்கள் தலைமையின் கீழ் அமைக்கப்பட்ட மாநில நிருவாகச் சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரையின் பேரில், தோற்றுவிக்கப் பட்டது. அரசின் செயல்பாடுகளில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாகவும் அரசுப் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகமானதாலும் இத்துறை ஏற்படுத்தப்பட்டது. இத்துறை பின்வரும் இரண்டு அலகுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அலகும் தனித்தனிச் செயலாளரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகிறது:

(i) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை,
(ii) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (பயிற்சி) துறை

2. இத்துறையானது அறிவுரை வழங்கும் பணிகள், சட்டப்பூர்வமான பணிகள் மற்றும் நிருவாகப் பணிகள் ஆகிய முக்கியப் பணிகளை ஆற்றி வருகிறது.

### அறிவுரை வழங்கும் பணிகள்

**''தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தல்கள்''** ஆகியவற்றில் வரையறுக்கப்பட்டுள்ளபடி கீழ்க்கண்ட இனங்கள் தொடர்பாக அறிவுரை வழங்கும் ஒரு துறையாக பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை செயல்பட்டு வருகிறது:

(i) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளின்கீழ் வரும் பல்வேறு பதவிகளுக்குக் காலியிட மதிப்பீட்டை நிர்ணயம் செய்தல், பதவி உயர்வு மற்றும் உயர் பதவியில் பணி நியமனம் ஆகியவற்றுக்கான தேர்ந்த பட்டியல் தயாரித்தல்;

(ii) அரசு அலுவலர்களின் பணியை வரன்முறைப் படுத்துதல் மற்றும் தகுதிகாண் பருவத்தினை முடித்தல் தொடர்பாக சிறப்பு / பொது விதிகளைத் தளர்த்துவது பற்றிய கருத்துருக்களைப் பரிசீலனை செய்தல்;

(iii) அடிப்படை விதிகளில் உள்ள பல்வேறுபட்ட காப்புரைகள் குறித்த ஆலோசனை வழங்குதல்;

(iv) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி பொதுவிதி 35-இன் கீழ் முதுநிலையைத் திருத்துவது குறித்த கருத்துருக்களை ஆய்வு செய்தல்;

(v) அரசுப் பணியில் நியமனம் செய்ய வரையறுக்கப் பட்ட கல்வித் தகுதிக்குச் சமமான கல்வித் தகுதி நிர்ணயித்தல் / அங்கீகரித்தல் குறித்த கருத்துருக்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் அமைக்கப் படும் அங்கீகரிப்புக் குழு' முன் வைத்தல் மற்றும் மேற்படி குழுவின் பரிந்துரையின்பேரில் ஆணை வெளியிடுதல்.

### சட்டப்பூர்வமான பணிகள்

அரசுப் பணியாளர்களின் பணிகள் தொடர்பாக பின்வரும் சட்ட மற்றும் ஒழுங்கு முறை விதிகளை இத்துறை நிருவகித்து வருகிறது:

(அ) மாநில அரசின் பல்வேறு துறைகளில் பணிபுரியும் அனைத்து வகை அரசுப் பணியாளர்களின் பணியினை முறைப்படுத்தும் பணிவிதிகள் (அகில இந்தியப் பணிகள் நீங்கலாக) ;

(i) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணி விதிகள் ( பகுதி I மற்றும் II ) ;
(ii) தமிழ்நாடு அரசுப் பணியாளர் நடத்தை விதிகள், 1973;

(iii) தமிழ்நாடு அரசு அடிப்படை விதிகள்;
(iv) தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள்;
(v) தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955.

(ஆ) அனைத்து அரசுத் துறைகளுக்கும் உள்ள பொதுவான, சில குறிப்பிட்ட பணியாளர் வகையினரை முறைப்படுத்தும் பணிவிதிகள்:

(i) தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதிகள்;
(ii) தமிழ்நாடு அடிப்படைப் பணி சிறப்பு விதிகள்;
(iii) தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி சிறப்பு விதிகள்- இனம் XXII.

(இ) தலைமைச் செயலகப் பணி:

(i) தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணி சிறப்பு விதிகள்;
(ii) தமிழ்நாடு பொதுப்பணி சிறப்பு விதிகள்-இனம் XII மற்றும் XIIA.

(ஈ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (Tamil Nadu Public Service Commission) :
தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள், 1954.

(உ) தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005
தமிழ்நாடு தகவல்பெறும் உரிமை (கட்டண) விதிகள், 2005

அரசு அலுவல்கள்

தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு அரசின் அலுவல்கள் பின்வரும் விதிகளின்படி இத்துறையின் கீழ் நிருவகிக்கப்பட்டு வருகின்றன:

(i) தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தல்கள்;
(ii) அவ்வப்போது வெளியிடப்படும் மாண்புமிகு முதலமைச்சரின் நிலை ஆணைகள்;
(iii) தமிழ்நாடு தலைமைச் செயலக அலுவலகக் கையேடு.

**நிருவாகப் பணிகள்**

(i) தலைமைச் செயலகத்தில் ஓர் அலகுமுறையின் (One Unit System) கீழ் வரும் அரசு சார்புச் செயலாளர்களின் நிலைவரை அனைத்துப் பணியாளர்களின் பணி அமைப்பு குறித்து இத்துறையில் கவனிக்கப்பட்டு வருகிறது.

(ii) மேலும் பணியாளர் சங்கங்களுக்கு அங்கீகாரம் அளித்தல் மற்றும் அவற்றின் கூட்டமைப்பு மன்றக் கூட்டங்களை நடத்துவது போன்ற பணிகளை இத்துறை செய்து வருகிறது.

(iii) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம் மற்றும் நிருவாகச் சீர் திருத்தக்குழு ஆகியவை இத்துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன.

**பணியாளர் சங்கங்கள்**

(i) இந்த அரசு பொறுப்பேற்றபின், அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களின் நலத்தினை கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் (மின்சாரம்) அவர்கள், தலைமைச் செயலக வளாகத்தில் இயங்கும் அரசு அங்கீகாரம் பெற்ற தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கம், தமிழ்நாடு தலைமைச் செயலக அலுவலர்கள் சங்கம், தமிழ்நாடு சட்டமன்றச் செயலக நிருபர்கள் சங்கம், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலக ஊர்தி ஓட்டுநர்கள் சங்கம் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலக உதவியாளர்கள் மற்றும்

அடிப்படைப் பணியாளர்கள் கிளைச் சங்கங்களின் நிர்வாகிகளுடன் பல்வேறு கோரிக்கைகள் குறித்து கலந்துரையாடல் நடத்தினார்.

(ii) மேலும், தலைமைச் செயலக ஊழியர்களின் நலன் பாதுகாக்கப்படும் வகையில் தலைமைச் செயலகப் பணியாளர்கள் அனைவரும் ஒரே சங்கமாக இயங்குவதெனவும் இதற்காக பதிவேடு எழுத்தர் முதல் கூடுதல் செயலாளர் வரை அனைவரையும் உறுப்பினர்களாகச் சேர்க்க வகை செய்யும் பொருட்டு சங்க துணை விதிகளைத் திருத்தம் செய்வதென தீர்மானம் செய்யப்பட்டது. இது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் (மின்சாரம்) அவர்கள் சம்பந்தப்பட்ட சங்க நிர்வாகிகளுடன் பேசினார். அதன் விளைவாக தமிழ்நாடு தலைமைச் செயலக அலுவலர்கள் சங்கம் தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கத்துடன் இணைந்து ஒரே சங்கமாக செயல்பட விருப்பம் தெரிவித்தது. இதனை ஆய்வு செய்து அரசு ஆணை (நிலை) எண். 30, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (கே) துறை, நாள் 22.02.2008-இல் தலைமைச் செயலக சங்க விதிகளுக்கு தக்க விதித் திருத்தங்கள் வெளியிடப்பட்டன.

(iii) மற்ற சங்கங்களின் இதர கோரிக்கைகள் பரிசீலனையில் பல்வேறு நிலைகளில் உள்ளன.

<u>அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் நலன்</u>

அரசின் செயல்பாடு மற்றும் அரசின் நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் மிக முக்கிய பணியில் ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஈடுபட்டுள்ளதால், அவர்களின் நல்லுறவின் அவசியத்தை இந்த அரசு உணர்ந்துள்ளது.

2. முந்தைய அரசு, அரசு ஊழியர்களின் பல்வேறு சலுகைகளைப் பறித்தது, இவ்வரசு அவைகளை மீண்டும் அரசு ஊழியர்களுக்கு வழங்கியதுடன், தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டம், 2003 (டெஸ்மா) திரும்பப்பெறுதல், பணிநியமன தடைச்சட்டம் விலக்கிக் கொள்**ளுதல்,** வேலை நிறுத்த நாட்களை பணிக்காலமாக வரன்முறை செய்**தல்,** முழு ஓய்வூதியம் பெற நிர்ணயிக்கப்பட்ட 33 ஆண்டுகள் என்றிருந்ததை 30 ஆண்டு பணிக்காலமாக குறைத்தல், பொங்கல் போனஸ் / கருணைத் தொகை வழங்கல், 6-வது ஊதியக் குழுவின் நிலுவைத் தொகையை மூன்று தவணைகளில் வழங்**கல்,** பண்டிகைக்கால முன்பணத்தை ரூ.1,000/-லிருந்து ரூ.2,000/-ஆக உயர்த்துதல் போன்ற பல சலுகைகளையும் வழங்கியுள்ளது.

<u>அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் நலன் குறித்து 2008-09 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட சலுகைகள்</u>

1. அகவிலைப்படி தற்போதுள்ள 41 சதவீதத்தோடு கூடுதலாக 6 சதவீதம் உயர்த்தப்பட்டு மொத்த அகவிலைப்படி 47 சதவீதமாக 01.01.2008 முதல் வழங்கப்படுவதோடு, இந்த அகவிலைப்படி உயர்வு நிலுவைத் தொகை ரொக்கமாக வழங்கப்படும்;

2. ஓய்வூதியர்களிடமிருந்து பிப்ரவரி 2008-வரை பெறப்பட்ட மருத்துவச் செலவின விண்ணப்பங்கள் அனைத்திற்கும் ஈட்டுத் தொகை வழங்க ஏதுவாக ரூ.10 கோடி மானியமாக அளிக்கப்படும்;

3. வயதான காலத்தில் ஓய்வூதியர்கள் பெறும் மருத்துவச் சிகிச்சைகளுக்கு உரிய தொகையை மீளப் பெறும் வகையில், மாதந்தோறும் ரூ.50/- பிடித்தம் செய்து மேற்கொண்ட மருத்துவச் செலவினத்தில் தற்போது உள்ள 75 சதவீகிதம் அல்லது ரூபாய் ஐம்பதாயிரம் என்ற உச்ச வரம்பு, 75 சதவிகிதம் அல்லது ரூபாய் ஒரு இலட்சம் என உயர்த்தி வழங்கப்படும்.

<u>நிருவாகச் சீர்திருத்தக் குழு</u>

வெளிப்படையான மற்றும் ஊழலற்ற நிருவாகத்தினை தலைமைச் செயலகம் முதல் கிராமம் வரை அளிப்பதற்காக, சென்னை உயர்நீதி மன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி டாக்டர் ஏ.கே. இராஜன் அவர்கள்

தலைமையில் பத்து உறுப்பினர்கள் மற்றும் ஒரு உறுப்பினர் செயலர் கொண்ட நிருவாகச் சீர்திருத்தக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.

2. நிருவாகத்தில் வெளிப்படையான தன்மையை ஊக்குவிப்பதற்காகவும், ஊழல் மற்றும் சிவப்பு நாடா முறை ஆகியவற்றை நீக்குவதற்காகவும் நிருவாகச் சீர்திருத்தக் குழு தனது குறிப்பாய்விற்கான (Terms of Reference) தலைப்புகளை வெளியிட்டுள்ளது.

3. நிருவாகச் சீர்திருத்தக் குழு, சென்னை பெரியார் திடல், பெரியார் மைய கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. அக்குழு தனது குறிப்பாய்விற்கான தலைப்புகள் குறித்து பல அம்சங்களை விவாதிக்க இதுவரை பதிமூன்று கூட்டங்களை நடத்தியுள்ளது.

4. நிருவாகச் சீர்திருத்தக் குழுவின் குறிப்பாய்வுத் தலைப்புகள் குறித்த பொது வினாப்படிவம் ஒன்று தயாரிக்கப்பட்டு, அது அனைத்து துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களின் கருத்துக் கோரி அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் நிருவாகச் சீர்திருத்தக் குழுவின் உறுப்பினர்களைக் கொண்டு சில முக்கிய துறைகளுக்கான துணைக் குழுக்களும் அமைக்கப்பட்டு, அவரவர்களின் குறிப்பிட்ட துறைகளுக்குரிய சிறப்பு வினாப் புலங்களைத் தயாரித்து, அதனை அத்துறைகளுக்கு அனுப்பி அதன் மீது குறிப்பு வழங்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

5. இது குறித்து முன்னணி தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் வெளியிடப்பட்ட பொது அறிவிப்பினைத் தொடர்ந்து, பொது மக்களின் கருத்துக்கள் அடங்கிய சுமார் 1,700 மனுக்கள் பெறப்பட்டு, அவைகள் குழுவின் ஆய்வில் உள்ளன.

6. இக்குழு வேலூர், கோவை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்கு நேரில் சென்று, அம்மாவட்ட அலுவல் சாராதோர் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் உட்பட முக்கிய அலுவலர்களுடன், அவரவர் தலைமையிடங்களில் அலுவல் நடைமுறைகள் குறித்து கலந்தாய்வுக் கூட்டங்களையும் நடத்தியுள்ளது. மேற்படி குழு தனது ஆய்வின் ஒரு பகுதியாக பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கல்வித்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை மற்றும் வருவாய்த்துறை ஆகிய துறைகளின் கீழுள்ள துறைத் தலைமைகளுடன் ஏற்கனவே மேற்படி துறைகளுக்கு அனுப்பப்பட்ட சிறப்பு வினாத்தொகுப்பிலுள்ள சிறப்பு அம்சங்கள் குறித்து கலந்தாலோசித்தது.

7. இக்குழு தனது முதல் அறிக்கையை அரசுக்கு விரைவில் சமர்ப்பிக்கும்.

<u>மக்கள் சாசனம்</u>

ஒவ்வொரு துறையிலும் மக்கள் சாசனத்தை உருவாக்க வேண்டுமென்று அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மக்கள் சாசனம் என்பது மக்களுக்கு அளிக்கப்படும் சேவைகள் குறித்து மக்களுடைய கேள்விகட்கு பதில் சொல்லும் பொறுப்பும், அதில் ஒளிவு மறைவற்ற தன்மையை உறுதி செய்வதும் ஆகும். பொது மக்கள் தங்கள் உரிமைகள் பற்றி அறிந்து கொள்வதற்கான விழிப்புணர்வையும் மற்றும் தங்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரங்களை அறிந்து கொள்ளும் நிலையையும் அதிகரிக்கச் செய்யவேண்டும். மேலும் அத்துறையின் திட்டப் பணிகளுக்கு அடிப்படையாக உள்ள சிறந்த பொதுப்பணி கோட்பாடுகளைக் காலத்திற்கேற்றவாறு உருவாக்கவும் மக்கள் சாசனம் உதவுகிறது.

2. மக்கள் சாசனத்தை தயாரிப்பதற்கான கோட்பாடுகளை உள்ளடக்கி ‘கையேடு’ ஒன்று தயாரித்து அனைத்து துறைகளுக்கும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையினால் அனுப்பப்பட்டுள்ளது. தலைமைச் செயலகத்தில் உள்ள அனைத்துத் துறைகளும் (விலக்களிக்கப்பட்ட ஐந்து துறைகள் தவிர) மற்றும் சில அரசு நிறுவனங்களும் மக்கள் சாசனத்தைத் தயாரித்து அவைகளைச் சட்டமன்றப் பேரவை முன் வைத்துள்ளன. பொது மக்களுடன் நேரடி தொடர்பு இல்லாத காரணத்தினால் மக்கள் சாசனத்தை தயாரிப்பதி லிருந்து கீழ்கண்ட ஐந்து துறைகள் விலக்களிக்கப் பட்டுள்ளன:

(i) பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை,
(ii) திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை,
(iii) மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை,
(iv) பொதுத் துறை,
(v) சட்டத் துறை.

3. அனைத்து மக்கள் சாசனங்களும் www.tn.gov.in. (NICNET/INTERNET) இணையதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளன. இவ்விணையதளம் தலைமைச் செயலகத்துறைகள் / துறைத் தலைமை அலுவலகங்கள் / தமிழ்நாடு அரசின் கீழ் உள்ள வாரியங்கள் / கழகங்கள் ஆகியவை தயாரிக்கும் மக்கள் சாசனங்களையும் உள்ளடக்கியதாகும்.

**<u>தகவல் மற்றும் சேவை மையம்</u>**

அரசு நடைமுறைகளை மக்கள் புரிந்து கொள்ளவும், தங்கள் கோரிக்கைகளின் தற்போதைய நிலையைத் தெரிந்து கொள்ளவும் தகவல் மற்றும் சேவை மையம் திறக்கப்பட வேண்டுமென்று அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகளும், மாவட்ட ஆட்சியர்களும், அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அரசின் ஆணைக்கேற்ப தகவல் மையங்கள் மாவட்ட ஆட்சியர் மற்றும் துறைத் தலைமை அலுவலகங்களில் இயங்கி வருகின்றன.

**<u>மின்னணு ஆளுகை</u>**

ஒளிவுமறைவற்ற, சிறந்த மின்னணு ஆளுகையினை உரிய அளவுக்குப் பயன்படுத்தும் வகையில், இந்நாள் வரை திருத்தப்பட்ட இத்துறையின் சட்டங்களும் விதிகளும் மின்னணு முறைக்கு மாற்றப்பட்டு அரசு வலைதளம் “www.tn.gov.in” இல் தேசிய தகவல் மையத்தின் (NIC) உதவியுடன் வெளியிடப்பட்டுள்ளன.

2. அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகளிலும் பயன்படுத்தப்படும் சட்டங்கள், விதிகள் மற்றும் அரசு ஆணைகள் யாவும் இன்றைய நிலைக்கேற்ப உருவாக்கப்பட்டு, கணினியில் அரசு வலைதளத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

3. இத்துறையில் மின்னணு கோப்பு கையாளும் முறையின் (EFPS) கீழ் கணினி மயமாக்கப்பட்ட தபால் விநியோக மையம் 01.01.2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. கணினி மயமாக்கப்பட்ட தபால் விநியோக முறை 01.01.2008 முதல் இதர அனைத்து செயலகத் துறைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

4. அனைத்து செயலக அலுவலர்கள் மற்றும் பணியாளர்களது பணி விவரங்கள் அனைத்தும் கணினி மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன (PINFOSYS).

5. மின்னணு ஆளுகையின் ஒரு பகுதியாக மின்னணு திறன்முறையினை (Secretariat e-knowledge System) தலைமைச் செயலகத்திலுள்ள துறைகளில் செயல்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது. இது தொடர்பாக செயல்முறை வரைவினை (Request For Proposal - RFP) அனுப்புமாறு மின்னணு ஆளுகை இயக்குநரிடம் கோரப்பட்டுள்ளது.அவ்வரைவு திட்டம் பெறப்பட்டவுடன் இத்திட்டம் தலைமைச் செயலக அனைத்து துறைகளிலும் செயல்படுத்தப்படும்.

6. மின் ஆளுகையினை தலைமைச் செயலகத்தில் திறம்பட செயல்படுத்தும் பொருட்டு முக்கிய நடவடிக்கைகளான வரவு செலவு திட்ட மேலாண்மை, அலுவலர் மற்றும் பணியாளர்களின் சம்பள பட்டியல், பணியாளர்களின் பணி விவரங்கள், நீதிமன்ற வழக்குகளையும், தகவலறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்களையும் கண்காணித்தல், சட்டமன்றப்பேரவை வினாக்களுக்கு விடையளித்தல் போன்றவற்றை தேசிய தகவல் மையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் கணினிமயமாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

7. இந்த ஆண்டு மின்னணு கோப்பு கையாளும் முறை (EFPS) மற்றும் தபால் விநியோக முறை (NIC) தமிழகத்தின் அனைத்து மாவட்டங் களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

## நிருவாக சீர்திருத்தங்கள்

நிருவாகச் சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக, இத்துறை முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து, பின்வரும் புதிய திட்டங்களை, இங்கிலாந்து அரசின் பன்னாட்டு வளர்ச்சித் துறையின் நிதியுதவியுடன் செயல்படுத்த வறுமை ஒழிப்பிற்கான தகுதியினை மேம்படுத்துதல் திட்டத்தின் (CBPR) கீழ் மைய அரசின் பணியாளர், பொதுமக்கள் குறைதீர்ப்பு மற்றும் ஓய்வூதியத் துறைக்கு அனுப்பியுள்ளது :

(i) சிவகங்கை மாவட்டத்தில், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களை பயோமெட்ரிக் (Bio-metric) முறையில் கண்டறிந்து, வறுமையினை முழுமையாக மட்டுப்படுத்தும் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் ( ரூ.20.19 இலட்சம்);

(ii) விழுப்புரம் மாவட்டம், வருவாய்த் துறையில் (வருவாய் நிருவாகத்தில்) இலவசமாக தொலைபேசி மூலம் பொதுமக்கள் குறை தீர்க்கும் திட்டம் ( ரூ.6.00 இலட்சம்);

(iii) விழுப்புரம் மாவட்டத்தில் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் பணிபுரிவோரின் வருகையினை பயோமெட்ரிக் (Bio-metric) அடிப்படையில் அளவீடு செய்யும் முறை ( ரூ.70.85 இலட்சம்).

மேற்குறிப்பிட்ட 3 திட்டங்களை மைய அரசு ஏற்றுக்கொண்டு, இனம் (i) மற்றும் (ii)-ல் குறிப்பிட்ட திட்டங்களுக்கான நிதி ஒப்புதலை வழங்கியுள்ளது.

2. இந்திய அரசின், நிருவாகச் சீர்திருத்தம் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர் குறைதீர்ப்பு மற்றும் தகவல்- நுட்பவியல் துறைகளால் தோற்றுவிக்கப்பட்ட சிறந்த அரசு வலைத் தளத்திற்கான 2007-08-ஆம் ஆண்டுக்குரிய தேசிய மின்னணு ஆளுகை (தங்கம்) விருதை தமிழ்நாடு அரசின் வலைதளமான www.tn.gov.in பெற்றுள்ளது.

## தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005

தகவல் பெறும் உரிமையானது ஒரு ஜனநாயக நாட்டிலுள்ள மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாகும். தகவல் பெறும் உரிமைச்சட்டம் 15.06.2005 அன்று இந்தியக் குடியரசுத்தலைவர் அவர்களின் ஒப்புதலைப் பெற்று 12.10.2005-முதல் செயலுக்கு வந்தது. அரசின் செயல்பாட்டில் வெளிப்படையான தன்மையையும் பொறுப்புடைமையையும் மேம்படுத்தும் பொருட்டு மக்களுக்குத் தேவைப்படும் தகவல்களை அவர்களுக்கு பொது அதிகாரிகளின் மூலம் அளிப்பது இச்சட்டத்தின் நோக்கமாகும்.

2. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 19-ஆம் பிரிவின் கீழ் அடிப்படை உரிமையாக அரசாங்கம், நாடாளுமன்றம், சட்டமன்றப் பேரவைகள் மற்றும் நீதிமன்றங்களிலிருந்து மக்கள் தகவலைப் பெறுவதற்கு இச்சட்டம் வகை செய்கிறது. இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு 1997-ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச்சட்டத்தை இயற்றியது. 2005-ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம் இயற்றப்பட்ட பிறகு, மைய அரசு சட்டம் தமிழ்நாடு 1997-ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச்சட்டத்தைவிட மேலோங்கி நிற்கிறது.

3. மைய அரசு, இச்சட்டத்தின்படி அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தவும், குறித்தளிக்கப்பட்ட செயற்பணிகளை ஆற்றவும், மைய தகவல் ஆணையத்தை அமைத்துள்ளது. அது போன்று தமிழக அரசும் இச்சட்டத்தின்படி அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தவும், குறித்தளிக்கப்பட்ட செயற்பணிகளை ஆற்றவும், தமிழ்நாடு மாநில தகவல் ஆணையத்தை அமைத்துள்ளது. மைய மற்றும் மாநில தகவல் ஆணையங்களுக்குரிய அதிகாரங்களும் மற்றும் பதவிப் பணிகளும் இச்சட்டத்தின் அத்தியாயம் v-ல் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாணையத்தில் மாநில தலைமை தகவல் ஆணையர் ஒருவரும், இரு மாநில தகவல் ஆணையர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இம்மாநிலத் தகவல் ஆணையத்தில் செயலாளர் மற்றும் பணியாளர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

4. ''தகவல் பெறும் உரிமைச்சட்டத்தைக் கண்காணித்தல் மற்றும் செயல்படுத்துதல்" குறித்த பொருள் பொதுத்துறையிலிருந்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறைக்கு 21.11.2006-ஆம் நாளிலிருந்து மாற்றப்பட்டுள்ளது. பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறையின் சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலாளர் அவர்கள் இச்சட்டத்தின் மாநில ஒருங்கிணைப்பு அலுவலர் (State Nodal Officer) ஆவார். தமிழ்நாடு மாநில தகவல் ஆணையத்தின் பணியாளரமைப்பையும் இத்துறை கவனிக்கிறது. தகவல் பெறும் உரிமைச்சட்டம் குறித்த வழிகாட்டி கையேடு ஒன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக இத்துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இது மீண்டும் பரிசிலிக்கப்பட்டு மறுபதிப்பாக விரைவில் வெளியிடப்பட உள்ளது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வைப்பதற்காக பொது அதிகார அமைப்பால் இச்சட்டத்தை செயல்படுத்திய தகவல்கள் உள்ளடக்கிய ஓர் ஆண்டறிக்கையை தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம் தயாரித்து வருகிறது.

5. பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, கருத்தரங்கம், கல்வி மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் ஆகிய பல்வகை ஊடகம் மூலம் தகவல் பெறும் உரிமைச்சட்டத்தை பொதுமக்களிடையே கொண்டு செல்வதற்காக 2008-09-ஆம் ஆண்டு பகுதி-II-ல் ரூ.5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ளது. அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையத்தால் 1,400 அலுவலர்களுக்கு தகவலறியும் சட்டம் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது .

6. தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ் தகவல்களைக் கீழ்க்கண்ட இரு வழிகளில் அளிக்கலாம்:

1. தன்னிச்சையாக வெளிப்படுத்துதல்,
2. விண்ணப்பத்தின் அடிப்படையில் அளித்தல்.

தலைமைச்செயலகத் துறைகள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் உட்பட துறைத்தலைவர்கள் தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் 4-ஆம் பிரிவின்படி பொதுத் தகவல் அதிகாரிகளாவர். அமைப்புகள், செயற்பணிகள் மற்றும் கடமைகள் போன்ற விவரங்களை அவர்கள் தாங்களாகவே மக்களுக்கு அளிக்க வேண்டும். பொதுமக்களின் பயனுக்காக அரசுத் துறைகளின் பணிகளைக் குறிப்பிட்டு நடைமுறை நூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவை தகவல் பெறும் உரிமைச்சட்ட இணைய தளத்தில் (www.tn.gov.in / rti) பதியப்பட்டுள்ளன. தகவல் வேண்டுவோரின் கோரிக்கை உடனுக்குடன் பரிசீலிக்கப்பட்டு தக்க பதில் அளிக்கப்படுவதுடன், அவர்களின் கோரிக்கைக்கு ஏற்ப அறிவுரைகள் மற்றும் ஆணைகளும் வெளியிடப்படுகின்றன. மக்களுக்குத் தேவைப்படும் தகவல்களை அளிக்க ஒவ்வொரு துறையிலும் பொது தகவல் அதிகாரிகள் மற்றும் மேல்முறையீட்டு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். தகவல் பெறுவதற்காக ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் விண்ணப்பக் கட்டணம் ரூ.50/- லிருந்து ரூ.10/-ஆக குறைக்கப்பட்டுள்ளது. மேலும், தகவல் பெறுவதற்கான ரூ.10/- விண்ணப்பக் கட்டணத்தை பணமாக அல்லது நீதிமன்ற கட்டண ஒட்டு வில்லையாக அல்லது வங்கி வரைவோலையாக அல்லது கேட்புக் காசோலையாக அல்லது கருவூல செலுத்துச்சீட்டு மூலமாக செலுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ் வழக்கறிஞர்கள், சங்கங்கள், பொதுமக்கள், அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் ஆகியோரிடமிருந்து 2007-ஆம் ஆண்டில் இத்துறையில் 597 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இவ்விண்ணப்பங்கள் பெரும்பாலும் அரசு ஆணைகள், கடிதங்கள், பணிவிதிகளுக்கான விளக்கங்கள், தனிநபர் தொடர்பான பதவி உயர்வு, ஒழுங்கு நடவடிக்கைகள், நடத்தை விதிகள், விடுப்பு விதிகள் தொடர்பானவையாகும். இவ்விண்ணப்பதாரர்களுக்கு உரிய பதில்கள் அளிக்கப்பட்டுள்ளன. மேல்முறையீட்டு மனுக்கள் பெறப்பட்டு அவைகளுக்கும் தக்க தகவல்கள் அளிக்கப்பட்டுள்ளன. பொது தகவல் அதிகாரிகள் அளித்த பதிலினால் மனநிறைவு அடையாத மனுதாரர் மேல்முறையீட்டு அதிகாரிகளிடம் முறையீடு செய்யலாம். தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின்படி தமிழ்நாடு மாநில தகவல் ஆணையத்திடம் இரண்டாவது மேல்முறையீடு செய்யலாம். மேல்முறையீடுகளுக்கு கட்டணம் ஏதும் இல்லை. தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம் தரும் பதில் மனநிறைவு அளிக்காத நிலையில் தகவல் வேண்டுவோர் உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மூலமாகவும் வழக்கு தொடரலாம்.

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அமைப்பும், பணிகளும்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தன்னாட்சி அமைப்புடன் தனது பணிகளை சுயமாகவும், சீராகவும், பாகுபாடு இன்றியும் செயல்படுத்தும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவுக் கூறு 315(1)-ன் கீழ் அமைக்கப்பட்டுள்ளது. இத்தேர்வாணையம், தலைவர் மற்றும் பதினான்கு உறுப்பினர்களைக் கொண்டது. அரசுப் பணிகளில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு விதிக்கப்பட்ட தடையாணை விலக்கிக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, அதிக அளவில் பணியாளர்களை தேர்ந்தெடுக்கும் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு, தேர்வாணையத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 11- லிருந்து பதினான்காக உயர்த்தி அரசாணை (நிலை) எண்.155, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை, நாள் 20.06.07-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இத்தேர்வாணையத்தின் தலைவர், உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரின் பணி நிலைகள் 1954-ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்கு முறை விதிகளுக்கு உட்பட்டவையாகும்.

2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 320-ல் கூறப்பட்டுள்ள கீழ்க்கண்ட கடமைகள் மற்றும் அலுவல் பணிகளை மேற்கொண்டு வருகிறது:

(i) பணியாளர்களைத் தெரிவு செய்தல் இத்தேர்வாணையத்தின் தலையாய பணியாகும்;

(ii) பணியாளர்களைத் தெரிவு செய்தல் பற்றிய விதிகள் இயற்றுவது, பணி நியமனம், பதவி உயர்வுகள் அளித்தல், ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாற்றல் செய்தல் ஆகியவற்றில் பின்பற்றப்பட வேண்டிய நெறிகள், அரசுப் பணியாளர்களின் ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மீதான மேல் முறையீடு குறித்த அனைத்திலும் தேர்வாணையம் அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது;

(iii) அரசுப் பணியாளர்களுக்கான துறைத் தேர்வுகளை தேர்வாணையம் நடத்துகிறது;

(iv) டேராடூன் இந்திய இராணுவ கல்லூரி நுழைவுத் தேர்வுகளை மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்தின் சார்பாகத் தேர்வாணையம் நடத்துகிறது.

3. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் 2007-08-ஆம் ஆண்டில் மாநில மற்றும் சார்நிலைப்பணிகளில் உள்ள பல்வேறு பதவிகளுக்கு நேரடி நியமனம் மூலம் போட்டித் தேர்வுகள் நடத்த இதுவரை 34 அறிவிக்கைகளை வெளியிட்டுள்ளது. இந்த 34 அறிவிக்கைகளில், 17 நியமனங்களுக்கு இதுவரை நடைபெற்ற போட்டித் தேர்வுகளில் கலந்து கொண்ட மொத்த விண்ணப்ப தாரர்களின் எண்ணிக்கை 10,53,176 ஆகும். மீதமுள்ள 17 நியமனங்களுக்கு, இனி நடைபெறவிருக்கும் போட்டித் தேர்வுகளில் தோராயமாக கலந்து கொள்ளவிருக்கும் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 1,74,882. தேர்வு செய்யப்படவிருக்கும் மொத்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 12,017 ஆகும். 01.04.2007 முதல் 13.03.2008 வரையிலான காலத்தில் தேர்வாணையக் குழுவினால் 75 பதவி உயர்வுக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு 1117 நபர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

4. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் 2008-09-ஆம் ஆண்டில் மாநில மற்றும் சார்நிலைப் பணிகளில் உள்ள பல்வேறு பதவிகளில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு போட்டித் தேர்வுகளை நடத்த உத்தேசித்துள்ளது. அப்போட்டித் தேர்வுகளில் தோராயமாக கலந்து கொள்ளவிருக்கும் தேர்வாளர்களின் எண்ணிக்கை 2,94,100 ஆகும்.

5. சம்பளம், படிகள் மற்றம் ஓய்வூதியம் உட்பட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அனைத்துச் செலவினங் களும் மாநில அரசு தொகுப்பு நிதியிலிருந்து செலவு செய்யப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் தேர்வாணையத்தின் ஆண்டு அறிக்கை தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபடும் இனங்கள் ஏதும் இருப்பின் அதற்கான விளக்கக் குறிப்புடன் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுகிறது.

<u>காலிப்பணியிடங்கள் நிரப்பிடல்</u>

இவ்வரசு 13.05.2006-ல் பொறுப்பேற்றபின் அரசுத் துறைகளில் காலியாக உள்ள அனைத்து பணியிடங்களையும் நேர்விற்கேற்ப தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர்கள் தேர்வு வாரியம், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், வேலைவாய்ப்பகம் மற்றும் பணி நியமனத் தேர்வு குழுக்கள் மூலம் விரைந்து நிரப்பிடத் தேவையான பல்வேறு அரசாணைகளை வெளியிட்டது. இவ்வரசு இதுவரை மொத்தம் 2,32,417 காலிப் பணியிடங்களை கீழ்க்கண்டவாறு பூர்த்தி செய்துள்ளது:

(i) அரசுப் பணியாளர் தேர்வாணையம் நாளது வரை மாநில மற்றும் சார்நிலைப் பணித் தொகுதிகளிலான பல்வேறு பணியிடங்களுக்கு நேரடி நியமன முறையில் பல்வேறு போட்டித் தேர்வுகளை நடத்தி 6,397 நபர்களை தெரிந்தெடுத்துள்ளது;

(ii) ஆசிரியர்கள் தேர்வு வாரியம் மூலம் நாளது வரை 13,299 நபர்கள் பட்டதாரி ஆசிரியர் உள்ளிட்ட பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்;

(iii) சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் மூலம் நாளது வரை காவல்துறை உதவி ஆய்வாளர் உள்ளிட்ட பணியிடங்களுக்கு 5,360 நபர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்;

(iv) வேலைவாய்ப்பகம் மூலம் நாளது வரை 46,931 நபர்கள் பல்வேறு பணியிடங்களில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்;

(v) வருவாய்த்துறையில் கிராம உதவியாளர்கள், தொழில்நுட்பக் கல்வித் துறையின் மூலம் வேலை வாய்ப்பக முதுநிலைப்படி தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை-III, ஊரக வளர்ச்சித் துறையில் மக்கள் நலப் பணியாளர்கள் மற்றும் சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறையில் சமையலர் உள்ளிட்ட மதிய உணவு/ ஊட்டச் சத்துப் பணியாளர்கள் இதுவரை மொத்தம் 43,033 நபர்கள் பணி நியமனத் தேர்வு குழு மூலமாக பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர்;

(vi) மேலும் பதவி உயர்வு போன்ற இதர நியமன முறைகள் மூலம் 37,625 காலிப்பணியிடங்கள் நாளது வரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன;

(vii) 1991-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியாற்றி பணியிழப்பிற்குள்ளானோர் 1,436 நபர்கட்கு பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது;

(viii) தொகுதி IV-ல் 3,368 தட்டச்சர் மற்றும் 507 சுருக்கெழுத்தர் நிலை-III ஆகிய பணியிடங்களுக்கும், சுமார் 4,103 இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு தற்போது மாதம் ஒன்றுக்கு ரூ.4,000/- தொகுப்பூதியத்தில் பணியாற்றிவர்களை அரசு பணிக்கு ஈர்த்துக் கொள்ளவும் அரசுப் பணியாளர் தேர்வாணையம் தேர்வுகளை நடத்தி பணியாளர்களை நியமிக்கும் பணியினை மேற்கொண்டுள்ளது ;

ix) மேலும் காலிப்பணியிடங்களை அறுதியிட்டு, விரைந்து பூர்த்தி செய்திடவும், இதில் ஏற்படும் இடர்பாடுகளை களைந்திடவும் இத்துறை செயலாளர் அவர்களால் துறைச் செயலாளர்கள் மற்றும் தொடர்புடைய துறை தலைமை அலுவலர்களுடன் நேரடியாக கலந்தாய்வுக் கூட்டங்கள் கடந்த ஆண்டைப் போல நடப்பு ஆண்டிலும் நடத்தப்பட்டன;

(x) தினக்கூலி / தொகுப்பூதியத்தில் ஏற்கனவே நியமனம் செய்யப் பட்டுள்ளவர்களை முறையான காலமுறை ஊதியத்தில் பணியமர்த்திட ஆணைகளிடப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது;

(xi) பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலுள்ள இஸ்லாமியர்கள் மற்றும் கிறித்தவர்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் தலா 3.5 சதவீத இட ஒதுக்கீடு வழங்க ஆணையிடப்பட்டதன் அடிப்படையில், ஏற்கனவே நடைமுறையிலிருந்த 100 புள்ளிகள் கொண்ட இனச் சுழற்சி முறை மாற்றியமைக்கப்பட்டு 200 புள்ளிகள் கொண்ட இனச் சுழற்சி முறை புகுத்தப்பட்டு அரசாணை (நிலை) எண். 241, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (கே) துறை, நாள் 29.10.2007-இல் ஆணைகள் வெளியிடப்பட்டன. மேலும், வேலை வாய்ப்பகங்கள் மூலம் பணி நியமனங்கள் மேற்கொள்ளும்போது, இனச்சுழற்சி முறையுடன் உடன் நிகழ்வாக முன்னுரிமை பெற்றவருக்கும், முன்னுரிமையற்றோருக்கும் இடையேயான விகிதாச்சாரம், இனவாரியாக கடைப்பிடிக்கப்பட வேண்டிய முறை குறித்தும் அரசாணை (நிலை) எண் 20, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, நாள் 12.02.08-இல் ஆணை வெளியிடப் பட்டுள்ளது;

(xii) அரசுத் துறைகளில் உள்ள பணியிடங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென போதுமான பங்கேற்பு உள்ளதா என்பதனை கண்டறிந்து எந்தெந்த பணியிடங்களில் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் பங்கேற்பு 19 விழுக்காட்டிற்குக் ( 18% + 1% ) குறைவாக உள்ளதோ அந்த பணியிடங்களுக்கு நேரடி நியமனம் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நியமிக்கப்பட வேண்டுமென்று அரசு முடிவெடுத்துள்ளது. இத்தகைய நேரடி நியமனம் ஏ, பி, சி மற்றும் டி என்ற ஒவ்வொரு வகை பிரிவிலும், கீழ்நிலையில் (lowest level) உள்ள பணியிடத்திற்கு செய்யப்படவேண்டும். இதன் பொருட்டு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கென ஒதுக்கப்பட்ட 18% மற்றும் 1% பணியிடங்களுக்கு குறைவான பங்கேற்பு (shortfall) உள்ள நிலையில் அவற்றை கண்டறிந்து போதுமான பங்கேற்பு ஏற்படுத்தும் வகையில் ஏ, பி, சி மற்றும் டி பிரிவுகளில் கீழ் நிலையிலுள்ள பதவிகள், தமிழ்நாடு அமைச்சுப் பணி மற்றும் தமிழ்நாடு நீதிமன்ற அமைச்சுப் பணிகளில் உள்ள இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III உட்பட அரசிற்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்றும், மேற்காணும் பதவிகளுக்கு நேரடி நியமனம் மேற்கொள்ள வேண்டி உரிய நியமனதாரர்களுக்கு அறிவிக்கை வெளியிட அரசு தெரிவிக்கும் என்றும், இத்தகைய நியமனம் ஒருமுறை மட்டுமே மேற்கொள்ளப்படும் என்றும் அரசு ஆணை (நிலை) எண். 220, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 14.09.2007-இல் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணிகளின் பொது விதிகளுக்கு திருத்தங்கள் வெளியிடப் பட்டுள்ளன.

<u>மாநில விழிப்புப்பணி ஆணையம்</u>

தமிழ் நாட்டில் 1965-ஆம் ஆண்டு மாநில விழிப்புப்பணி ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. பொதுப்பணிகளில் ஊழல் தடுப்பு தொடர்பான நடவடிக்கைகளில் ஏற்படும் நிருவாக சிக்கல்கள் குறித்தும், கவனத்திற்கு கொண்டுவரப்படும் தனிப்பட்ட ஊழல் நேர்வுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அரசிற்கு அறிவுரைகள் வழங்குவது இவ்வாணையத்தின் முக்கிய செயலாகும். விழிப்புப்பணி ஆணையம் தன் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம் உதவி செய்கிறது.

2. மாநில விழிப்புப்பணி ஆணையத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளாவன:

(i) பொது ஊழியர் ஒருவரின் நேர்மையற்ற செயல்பாடு அல்லது ஊழல் செயல்பாடு பற்றிய அவர்களின் நடவடிக்கைகள் அல்லது அவர்கள் மீது இந்த செயல்பாடுகள் குறித்த ஐயங்கள் மீது விசாரணை நடத்துதல்;

(ii) ஒரு பொது ஊழியர் தன்னுடைய நேர்மையற்ற செயல்பாட்டிற்கு அல்லது ஊழல் செயல்பாட்டிற்கு தன் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியதாக அல்லது தன் அதிகாரத்தை உரிய முறையில் பயன்படுத்தாமை பற்றி கூறப்படும் புகார் மீது விசாரணை அல்லது புலனாய்வு மேற்கொள்ளல்;

(iii) விசாரணைக்குத் தேவைப்படும் தகவல்கள் மற்றும் புள்ளி விவரங்களை சேகரித்தல்;

(iv) தன் அதிகார வரம்பிற்குட்பட்ட செயல்பாடுகள் மற்றும் ஆணையத்தின் பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விவரங்களை அரசுத் துறைகள் அல்லது அரசு நிறுவனங்கள் அல்லது பொது ஊழியரிடமிருந்து கேட்டுப் பெறுதல்;

<u>ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம்</u>

1964-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம் உருவாக்கப்பட்டது. தற்போது இவ்வியக்குநரகம் கூடுதல் காவல் துறை இயக்குநர் நிலையில் உள்ள இயக்குநர் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இயக்குநருக்கு உதவியாக காவல் அலுவலர்கள் மற்றும்

சட்ட அலுவலர்கள் முறையே காவல்துறை மற்றும் குற்றவழக்குத் தொடர்பு இயக்குநரகம் ஆகியவற்றிலிருந்து அழைக்கப்பட்டு பணிபுரிகின்றனர்.

2. ஊழல் தடுப்பு கண்காணிப்பு இயக்குநரகம் கீழ்க்கண்ட பணிளை மேற்கொள்கிறது:

(1) லஞ்ச ஊழல் மற்றும் முறைகேடுகள் குறித்து நுண்ணறிவுத் தகவல்கள் சேகரித்து புலனாய்வு செய்வது மற்றும் 1988-ஆம் ஆண்டைய ஊழல் தடுப்பு சட்டத்தின் (மையச் சட்டம் 49, 1988)கீழ் வரும் குற்றச் செயல்கள் குறித்து புலனாய்வு செய்வது;

(2) விழிப்புப்பணி ஆணையர் மற்றும் துறைத் தலைவர்கள், பொது மக்கள், அரசு இவர்களிடமிருந்து பெறப்படும் பொது ஊழியர்கள் மீதான குற்றவியல், தவறான நடத்தை (லஞ்சம் மற்றும் ஊழல்), குற்றவியல் கையாடல் மற்றும் குற்றவியல்புடைய நம்பிக்கை மோசடி தொடர்பான புகார்கள் மீது விசாரணை மேற்கொள்வது;

(3) மாவட்ட ஆய்வுக் குழு மற்றும் துறைத் தலைவர்களின் உதவியுடன் பல துறைகளில் உள்ள ஊழல் நடைபெறும் முக்கியமான இடங்களில் ஊழல் தடுப்பு நடவடிக்கையாக திடீர் ஆய்வுகள் மேற்கொள்வது;

3. ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம் தனது புலனாய்வு அறிக்கைகளை மாநில விழிப்புப்பணி ஆணையத்திற்கு அனுப்பி வைக்கிறது. மாநில விழிப்புப்பணி ஆணையம், அவ்வறிக்கைகளை ஆய்வுசெய்து, அரசு அலுவலர் தொடர்புடைய தலைமைச் செயலக துறைகளுக்கு, தனது பரிந்துரையுடன், உரிய மேல்நடவடிக்கைகள் தொடர அனுப்பி வைக்கிறது.

**ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள்**

ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள் ஒவ்வொன்றும் நீதி முறை சார்புடைய மன்றமாக இயங்கி வருகிறது. தற்போது சென்னை, வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய எட்டு இடங்களில் ஒழுங்கு நடவடிக்கைத் தீர்ப்பாயங்கள் இயங்கி வருகின்றன. இத்தீர்ப்பாயங்கள் இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள் / மாவட்ட வருவாய் அலுவலர் தலைமைப் பொறுப்பில் உள்ளன. தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955-ன் கீழ், ஒழுங்கு நடவடிக்கை தீர்ப்பாயங்களுக்கு அரசினால் அனுப்பப்படும் வழக்குகளை விசாரணை செய்து, அவ்விசாரணையில் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டனவா அல்லது நிரூபிக்கப்படவில்லையா என்று கண்டறியப்பட்டு, அறிக்கைகள் அரசுக்கு அனுப்பப்படுகின்றன.

**பயிற்சி**

அரசுப் பணியாளர்களது பொது அறிவு, திறன் மற்றும் செயல் திறனைத் தொடர்ந்து உயர்த்தி, அவர்களது திறமைகளை மேம்படுத்துவதற்கு பயிற்சி ஒரு முக்கிய பங்காற்றுகிறது. பொதுமக்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு அரசின் சேவைகள் மக்களுக்கு முழுப்பயன் விளைவிக்கும் வகையில் அரசுப் பணியாளர்களுக்கு நிருவாக மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் கீழ்க்கண்ட ஐந்து பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன:

**(i) தலைமைச்செயலகப் பயிற்சி நிலையம்**

தலைமைச்செயலகத் துறைகளில் நேரடியாக நியமனம் செய்யப்பட்ட உதவிப் பிரிவு அலுவலர்கள், உதவியாளர்கள், நேர்முக எழுத்தர்கள், தட்டச்சர்கள் ஆகியோர் முழுநிறைவாகக் கோப்புகளைக் கையாளும் வண்ணம் அவர்களுக்கு தலைமைச்செயலக பயிற்சி நிலையத்தில் பொது நிருவாக நடைமுறை மற்றும் நிதி நிருவாக நடைமுறையில் 60 வேலை நாட்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியின் முடிவில் நடத்தப்படும் தேர்வுகளில் வெற்றி பெறுதல் நேரடி நியமனம் செய்யப்பட்ட உதவிப் பிரிவு அலுவலர்களின் தகுதிகாண்பருவத்தை திருப்திகரமாக முடிப்பதற்கும், உதவியாளர்கள், நேர்முக எழுத்தர்கள், தட்டச்சர்கள் ஆகியோர் உதவிப் பிரிவு அலுவலர் பதவிக்கான தேர்ந்த பெயர் பட்டியலில் இடம் பெறுவதற்கும் உரிய முன் தகுதியாகும். தலைமைச்

செயலக அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் அறிவுத்திறன் மற்றும் ஆற்றலை இன்றைய நிலைக்கேற்ப உயர்த்தி ஒழுங்கு நடவடிக்கை குறித்த நிகழ்வுகளைக் கையாளுதல், நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்புடைய கோப்புகளைக் கையாளுதல் தொடர்பான நடைமுறைகள் குறித்த இதர பயிற்சிகளும் இப்பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படுகின்றன. செயலகத்தில் புதிதாக நியமனம் செய்யப்பட்ட உதவியாளர்கள் மற்றும் நேர்முக எழுத்தர்களுக்கு கணினியைக் கையாளுதல் குறித்த அடிப்படைப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை 57 அணிகளுக்கு இப்பயிற்சி நிலையத்தில் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**(ii) அண்ணா மேலாண்மை நிலையம் அமைப்பு மற்றும் நோக்கங்கள்**

அண்ணா மேலாண்மை நிலையமானது தமிழக அரசால் சங்கங்களின் பதிவுச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமாகும். இந்நிலையம் தமிழக அரசிற்கு பயிற்சி தொடர்பான ஆலோசனைகளை வழங்கும் நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. இந்நிலையமானது தனது நிருவாக ஆட்சிக் குழுவில் மாண்புமிகு தமிழக மின்சாரத்துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்டுள்ளது. மேலும், கல்வி மற்றும் மேலாண்மை துறைகளில் உள்ள அரசு உயர் அலுவலர் மற்றும் சான்றோர்களை அக்குழுவில் உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது.

**செயற்பாடுகள்**

1. அண்ணா மேலாண்மை நிலையமானது, நிலவி வரும் சூழலுக்கேற்ற பயிற்சி அளிப்பதற்காக தகுந்த வசதிகள், உபகரணங்கள் உள்ளடக்கியதான நவீன வசதிகளுடன் கூடிய தங்குமிடம், நூலகம், கணிப்பொறி மையம், வகுப்பறைகள், கலையரங்கம் ஆகிய வசதிகளைக் கொண்டுள்ளது;

2. இந்நிலையன் மாநில அரசு, இந்திய அரசு மற்றும் பிற மாநில அரசுத்துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் அலுவலர்களுக்கு பொது நிருவாகம், தகவல் தொழில் நுட்பம், நிதி மேலாண்மை, நடத்தையியல் மற்றும் ஆளுமை மேலாண்மை ஆகியவற்றில் பயிற்சிகளை அளித்து வருகின்றது;

3. இந்நிலையத்தில் இந்திய அரசின் உதவியுடன் பேரிடர் மேலாண்மை பிரிவு இயங்கி வருகிறது. இப்பிரிவின் மூலம் பேரிடர் மேலாண்மை பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது;

4. இந்நிலையம் நிதி மேலாண்மையினை சிறப்பினமாக கொண்டு முனைவர் பட்டத்திற்கான ஆய்வினை மேற்கொள்ள சென்னை பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அண்ணா மேலாண்மை நிலையத்தில் தமிழக அரசு அதிகாரிகள், பிற மாநில அரசுத்துறை அதிகாரிகள், இந்திய அரசு மற்றும் மாநிலப் பொதுத்துறை நிறுவனங்களின் அதிகாரிகள் ஆகியோருக்கு பல்வேறு மேலாண்மை வளர்ச்சி மற்றும் நிறுவனம் தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. 2007-08-ஆம் வருடத்தில் 2008 மார்ச் முடிய இந்நிலையம் 248 பயிற்சி வகுப்புகளை நடத்தி (784 பயிற்சி நாட்களை உள்ளடக்கி) மொத்தம் 6,123 அரசு அலுவலர்களுக்கு பொது மேலாண்மை, தகவல் தொழில் நுட்பம், நடத்தையியல், விற்பனை, உற்பத்தித்திறன், தரம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆகிய தலைப்புகளில் பயிற்சி அளித்துள்ளது. மருத்துவச் சுற்றுலாவின் பலவிதமான அம்சங்களை வெளிப்படுத்தும் விதத்திலான புதியதொரு பயிற்சி மற்றும் சுற்றுலா வழிகாட்டிகளுக்கான பயிற்சியினையும் அண்ணா மேலாண்மை நிலையமும் தமிழக அரசின் சுற்றுலா மேம்பாட்டுக் கழகமும் இணைந்து 2007-08-ல் நடத்தியுள்ளது. அண்ணா மேலாண்மை நிலையமானது, ''தகவல் அறியும் உரிமைச் சட்டம்'' என்ற தலைப்பில் 2008 மார்ச் மாதம் முடிய 58 பயிற்சி வகுப்புகளை நடத்தி உள்ளது. கணினித் துறையில், ''கணினி செயல் முறைகள் மற்றும் தமிழ் நிலம் மென்பொருள்'' என்ற தலைப்பில் சிறப்பு பயிற்சியினை நில அளவை மற்றும் தீர்வு துறையினருக்கு அண்ணா மேலாண்மை நிலையத்தினால் 2007-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையில் நடத்தப்பட்டது. இப்பயிற்சியானது, பயிற்சி பெற்றவர்கள் தங்களது பணியினைக் கணினிமயமாக்கி பொதுமக்கட்கு விரைவான சேவையளிக்க வகை செய்கிறது. அண்ணா மேலாண்மை நிலையத்தின் பேரிடர் மேலாண்மை பிரிவானது மார்ச் 2008 வரையில் வெள்ளம் மற்றும் புயல் மேலாண்மை, பூகம்பம், நிலச்சரிவுகள், தொழில் இடர்பாடுகள் மற்றும் சுற்றுச்சூழல் குறித்த பேரிடர் ஆகிய தலைப்புகளில்

24 பயிற்சி வகுப்புகளை நடத்தியுள்ளது. அண்ணா மேலாண்மை நிலையமானது ''பொது விநியோக முறை''*யின் குறிப்பிடத்தக்க செயல்பாட்டிற்கான 11 சிறப்பு பயிற்சிகளை, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையினருக்கு அளித்துள்ளது. அண்ணா மேலாண்மை நிலையத்தில் 05-11-2007அன்று நடந்த நிருவாக ஆட்சிக்குழு கூட்டத்தில், பெங்களூரிலுள்ள இந்திய மேலாண்மை நிலையத்தைச் சார்ந்த பொதுக்கொள்கை மையம், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம், இந்திய தரவட்ட அமைப்பு (சென்னை கிளை) மற்றும் சென்னைப் பல்கலைக் கழகம், சிங்கப்பூரிலுள்ள தேசீய பல்கலைக் கழகத்தின் லீ குவான் யூ பொதுக்கொள்கை மையம் ஆகியவற்றுடன் அண்ணா மேலாண்மை நிலையம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ள கொள்கை ரீதியான ஒப்புதல் அளித்துள்ளது.

### (iii) அ மற்றும் ஆ பிரிவு அடிப்படைப் பயிற்சி நிலையம்

அண்ணா மேலாண்மை நிலையத்தின் **அ** மற்றும் **ஆ** பிரிவு அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சி நிலையமானது நேரடியாகவும் மற்றும் பதவி உயர்வின் மூலமாகவும் நியமனம் செய்யப்பட்ட **அ** மற்றும் **ஆ** பிரிவு அலுவலர்களுக்குப் பயிற்சியளிக்கின்றது. கூடுதல் பாடங்கள் மற்றும் ஒலி ஒளி சாதனங்கள் மூலம் பயிற்சி பொருளடக்கம் மேம்படுத்தப்பட்டுள்ளது. பயிற்சியின் பாடத்திட்டமானது, அலுவலக நிருவாகம், நிதி நிருவாகம், பொது நிருவாகம், சட்டம், பொருளாதாரம், திட்டம் மற்றும் மேம்பாடு, பேரிடர் மேலாண்மை மற்றும் கணினி ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

2007-08-ஆம் ஆண்டில் அண்ணா மேலாண்மை நிலையத்தின் **அ** மற்றும் **ஆ** பிரிவு அடிப்படைப் பயிற்சி நிலையமானது 15 பயிற்சி வகுப்புகளை நடத்தி 313 அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளது.

### (iv) அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வு பயிற்சி மையம்

மாண்புமிகு தமிழக முதல்வரின் 1999-2000-ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட உரையின் அடிப்படையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியவர்களுக்கான அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வுக்கு பயிற்சி அளிக்கும் இரண்டு பயிற்சி நிலையங்களையும் ஒருங்கிணைத்து ''அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வு பயிற்சி மையம்'' சென்னை அண்ணா நகரில் தொடங்கப்பட்டது. அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வுக்குச் செல்லும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதும், பயிற்சியின் தரத்தினை உயர்த்தி அத்தேர்வில் வெற்றிபெறும் தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதும் இப்பயிற்சி மையத்தின் நோக்கமாகும். இத்தேர்வுப் பயிற்சி நிலையமானது, ஒரு முதல்வர் மற்றும் செயல் திறன் உறுப்பினர்களுடன் அண்ணா மேலாண்மை நிலையத்தின் இயக்குநர் மற்றும் பயிற்சி துறைத்தலைவரின் ஒட்டுமொத்த நிருவாகத்தின் கீழ் இயங்கி வருகின்றது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியவர்களுக்கு, தங்குமிடம், உணவு, நூலகம் மற்றும் கணினி வசதிகளுடன் கூடிய சீரிய பயிற்சியினை ஒரே கூரையின் கீழ் அளித்திடும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 300 மாணவர்களுக்கு ஒவ்வொரு வருடமும் இந்தியத் தேர்வாணையத்தினரால் நடத்தப்படும் அகில இந்திய குடிமைப்பணிகளுக்கான பூர்வாங்க மற்றும் முதன்மைத் தேர்வுகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது. முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு நேர்காணலினை எதிர்கொள்ளும் வகையிலான மாதிரி நேர்காணல் பயிற்சிகளும் அளிக்கப் படுகின்றன. 1996-ஆம் ஆண்டிலிருந்து அகில இந்திய குடிமைப்பணிகளுக்கு தமிழக அரசால் சென்னை அண்ணாநகரில் நடத்தப்படும் அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வு பயிற்சி மையத்தின் மூலமாக 231 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 2007-ஆம் ஆண்டு இப்பயிற்சி மையத்தின் மூலமாக 54 நபர்கள் முதன்மைத்தேர்வில் தேர்ச்சிப் பெற்று இந்திய தேர்வாணையத்தினால் 31.03.2008 முதல் நடத்தப்படும் நேர்காணலுக்கு செல்ல உள்ளனர்.

அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வு பயிற்சி மையமானது தற்சமயம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான கட்டிடத்தில் வருடாந்திர வாடகையாக ரூ.2.35 இலட்சம் அளித்து இயங்கி வருகிறது. இப்பயிற்சி மையத்தினை மேம்படுத்தும் நோக்கில், கட்டிடத்தையும் நிலத்தையும்

வீட்டுவசதி வாரியத்திலிருந்து அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வு பயிற்சி மையத்திற்கு மாற்றம் செய்திட அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது.

**(V) அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்**

பவானிசாகரிலுள்ள அரசு அலுவலர் பயிற்சி நிலையமானது தமிழ்நாடு அமைச்சுப்பணியாளர்களுக்கு (இளநிலை உதவியாளர்கள்/ உதவியாளர்கள்) 60 நாட்களுக்கான அடிப்படைப் பயிற்சிகளை பல்வேறு வகையான நிருவாகச் செயல் முறைகளில் அளிப்பதற்காக 1974-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. மேலும், துணை வட்டாட்சியர்களுக்கும் அவர்களது அறிவாற்றலை செம்மைப் படுத்துதலுக்கான 28 நாள் பணியிடைப் பயிற்சிகளும் இந்நிலையத்தில் அளிக்கப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் சுமார் 2,100 இளநிலை உதவியாளர்களும் / உதவியாளர்களும் மற்றும் 180 துணை வட்டாட்சியர்களும் பயிற்சி பெறுகின்றனர்.

**ஆய்வுப் பிரிவு**

அனைத்து துறை தலைமை அலுவலகங்களின் நிருவாகத்தை செம்மைப்படுத்தும் நோக்கத்துடன் துறைத் தலைமை அலுவலகங்களை முதுநிலை அலுவலர்களைக் கொண்டு முறையான மற்றும் முழுமையான அளவில் காலமுறைப்படி ஆய்வு செய்யும் திட்டத்தை அரசு 1959-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. அதன்படி தலைமைச் செயலகத்தில் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (பயிற்சி) துறை செயலாளரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் 3 பிரிவுகளைக் கொண்ட ஆய்வு அலகு ஒன்று ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றது. ஆய்வு-I மற்றும் ஆய்வு-II பிரிவுகள் முறையே துணைச் செயலாளர் மற்றும் கூடுதல் செயலாளர் நிலையிலும், ஆய்வு-III பிரிவு மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலும் உள்ள அலுவலர்களின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் தயாரிக்கப்படும் ஆய்வுத் திட்ட நிகழ்ச்சி நிரல்களின்படி தலைமைச் செயலகத் துறைகள் உள்ளிட்ட 30 துறைத்தலைமை அலுவலகங்களில் இம்மூன்று ஆய்வுப் பிரிவுகளும் ஆய்வு மேற்கொண்டு முதனிலை ஆய்வு அறிக்கையினை தயாரிக்கின்றன. அதனடிப்படையில் இறுதி ஆய்வு மேற்கொள்வதற்கென நியமனம் செய்யப்படும் முதுநிலை இந்திய ஆட்சிப்பணி அலுவலர்களால் இறுதி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அரசுக்கு ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது.

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் மூன்று ஆய்வுப் பிரிவுகளும் மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கு இரண்டு நாட்களுக்கு ஒழுங்கு நடவடிக்கை குறித்த முன்னோடிப் பயிற்சியினையும், கண்காணிப்பாளர் மற்றும் மேலாளர் நிலையில் உள்ள பணியாளர்களுக்கு மூன்று நாட்களுக்கு அலுவலக நடைமுறை குறித்த குறுகிய காலப் பயிற்சியினையும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களுடன் இணைந்து நடத்தி வருகின்றன. இப்பயிற்சி வகுப்புகள் ஒவ்வொரு ஆண்டும் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் நடத்தப்படுகின்றன. 2007-08-ஆம் ஆண்டில் 30 முன்னோடிப் பயிற்சிகளும், 30 குறுகியகால பயிற்சிகளும் நடத்தப்பட்டுள்ளன.

**மாவட்ட ஆய்வுக்குழுக்கள்**

மாவட்ட அளவிலான அலுவலகங்களின் நிருவாகத் திறமையை மேம்படுத்துவதற்காகவும், சார்நிலை அலுவலர்களின் பணியை முறையாக கட்டுப்படுத்துவதற்காகவும் 1975-ஆம் ஆண்டு மாவட்ட ஆய்வுக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. தற்போது 11 மாவட்ட ஆய்வுக் குழுக்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு மாவட்ட ஆய்வுக்குழுவும் துணை ஆட்சியர் தகுதியில் உள்ள மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் தலைமையில் இயங்கிவருகிறது. வட்டாட்சியர் தகுதியில் துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் ஒருவரும், உதவியாளர் தகுதியில் இரண்டு ஆய்வாளர்களும், ஒரு தட்டச்சர் மற்றும் இரண்டு அலுவலக உதவியாளர்களும் ஒவ்வொரு மாவட்ட ஆய்வுக்குழுவிலும் பணியாற்றுகின்றனர்.

மாவட்ட ஆய்வுக் குழுக்கள் மாவட்ட அளவிலான அலுவலகங்களில் ஆண்டுதோறும் விரிவான ஆய்வு மற்றும் பொதுமக்களின் புகார்களுக்குள்ளான அலுவலகங்களில் திடீர் ஆய்வுகளையும் மேற்கொள்வதோடு, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் வழிகாட்டுதலின் படி மாவட்ட விழிப்புப்பணி மற்றும் ஊழல் தடுப்புக் குழுவின் திடீர் ஆய்வுகளுக்கும் உறுதுணையாக இருக்கின்றன.

2007-08-ஆம் ஆண்டில் 11 மாவட்ட ஆய்வுக் குழுக்களும் மொத்தம் 96 விரிவான ஆய்வுகளையும், 2,209 திடீர் ஆய்வுகளையும், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் முன்னிலையில் விழிப்புப்பணி மற்றும் ஊழல் தடுப்புக்குழு அலுவலர்களுடன் 68 இணைந்த கூட்டங்களையும் நடத்தியுள்ளன.

<u>அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு</u>

அமைப்பு மற்றும் செயல்முறைக் குழுவின் நோக்கமானது அரசின் பல்வேறு துறைகளின் நடைமுறைகளை சீர்திருத்தம் செய்வது, பணி அளவீட்டின்படி தேவையான பணியாளர்களை (மனித சக்தி) நிர்ணயம் செய்வது மற்றும் சிக்கன நடவடிக்கைகளை அமுல்படுத்துவது ஆகியனவாகும். அமைப்பு மற்றம் செயல்முறைக் குழுவின் ஆராய்ச்சியில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் முக்கிய இலக்குகளாகும்:

i) மனித சக்தி (பணியாளர்கள்) தேவையை கணித்து அறிதல்;
ii) வழிமுறைகள் மற்றும் நடைமுறைகளை எளிதாக்குதல்;
iii) அரசு துறைகளில் சிக்கன நடவடிக்கைகளை கையாளுதல் மற்றும் செயல்திறனை கூர்படுத்துதல்;
iv) அதிகாரங்களை பகிர்ந்தளித்தல்;
v) சீரிய முறையில் ஆவண பாதுகாப்பு.

2. அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு தற்பொழுது இரண்டு நிருவாகக் குழுக்களைக் கொண்டுள்ளது. ஒரு நிருவாகக் குழுவிற்கு அரசு கூடுதல் செயலர் மற்றும் அமைப்பு மற்றும் செயல்முறை வல்லுநர் அவர்களும், மற்றொரு குழுவிற்கு அரசு இணைச் செயலர் (அமைப்பு மற்றும் செயல்முறை) அவர்களும் தலைமை ஏற்று நடத்துவதோடு, அமைப்பு மற்றும் செயல்முறைப் பகுதியின் அனைத்து குழுக்களும் (மேற்பார்வை குழுவும் உள்பட) இணைச் செயலரின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றது. மேற்பார்வை குழு ஒரு ஆராய்ச்சி அலுவலர் மற்றும் ஒரு உதவி பிரிவு அலுவலரைக் கொண்டுள்ளது. இது நிருவாகக் குழுக்கள் அளித்த அறிக்கைகள் மீது தொடர் நடவடிக்கைகள் எடுப்பதோடு, இப்பிரிவிற்குத் தேவையான அலுவலக நடைமுறைகளையும், நிதி ஒதுக்கீடு செய்யும் பணியும் இப்பிரிவால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3. கண்காணிப்புக் குழுவானது ஒவ்வொரு ஆண்டும் தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகளையும், துறைத் தலைவர்களையும், அவர்களது துறைகளில் நிருவாகச் சிக்கல் எவையேனும் இருக்கிறதா என்றும், அவற்றிற்கு அமைப்பு மற்றும் செயல்முறைக் குழுவின் ஆராய்ச்சி தேவையா என்பது குறித்தும் தகவலளிக்குமாறு கோருகிறது.. அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் ஒரு செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு, ஒவ்வொரு நிருவாகக் குழுவிற்கும் ஆராய்வுப் பணி மேற்கொள்ள பகிர்ந்தளிக்கப்படுகிறது. வருடாந்திர செயல் திட்ட ஆராய்வுகளைத் தவிர, துறைகளின் கோரிக்கைகளின் அடிப்படையில் சிறப்புப் பணிகளும் ஆராய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தலைமைச் செயலகத் துறைகளுக்கும், துறை தலைமை அலுவலகங்களுக்கும் இடையே செயல்பாட்டில் உள்ள ''ஒற்றைக் கோப்பு முறை'' முக்கியத்துவம் கருதி கோப்புகளை ''நிலைதாண்டி அதிகாரிகளுக்கு அனுப்பும் முறை'' துறைகளில் ''கோப்புகளை அனுப்பும் நடைமுறை'' மற்றும் ''உழவர் சந்தை செயல்பாடு'' ஆகியவைகள் மீதான ஆராய்ச்சி பணி இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டது. வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்மை வணிகம், முதன்மை வன பாதுகாவலர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் மற்றும் சுற்றுலா மற்றும் பண்பாடு துறை ஆகிய அலுவலகங்களில் மேற்கொண்டுள்ள நான்கு ஆய்வுகள் நடந்தேறி வருகின்றன. இதுவரை அமைப்பு மற்றும் செயல்முறைக் குழு 228 அறிக்கைகளை வழங்கி நடைமுறைப்படுத்துவதற்காக அவைகளை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைத்துள்ளது.

## 2008-09-ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டங்கள்

2008-09-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பகுதி 2 திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன :

### 1. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை – தலைமைச் செயலகம்

(i) மின்னணு கோப்பு கையாளுதல் முறைக்காக (EFPS) 32 கணினிகள் மற்றும் மென்பொருள்கள் வாங்குதல்;

(ii) பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறையின் கணினி மையத்திற்கு 7 சீர்வளி குளிர் சாதனம் மற்றும் நகல் எடுக்கும் இயந்திரம் ஒன்று வாங்குதல்;

(iii) தகவல் அறியும் உரிமைச்சட்டத்தை பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, கருத்தரங்கம், கல்வி மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் ஆகியன மூலம் பொதுமக்களிடையே கொண்டு செல்லுதல்.

### 2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்திற்கு நகல் எடுக்கும் கருவிகள்-4, டெஸ்க் ஜெட் பிரிண்டர்கள்-10, டாட் மேட்ரிக்ஸ் பிரிண்டர்கள் - 15, சீர்வளிச் சாதனங்கள் -10, பார்கோட் ரீடர்கள்- 6, நிகரிக் கருவிகள்- 3, கணினிகள்- 40 மற்றும் அதன் தொடர்பான துணைப்பொருட்கள், லேசர் பிரிண்டர்கள்-4, எஸ்.கியூ.எல்.விண்டோ-எக்ஸ்பிபுரபஷனல் மென்பொருள்கள், ரிக்கோ காப்பியர் பிரிண்டர்கள், தண்ணீர் சுத்தம் செய்யும் கருவிகள் 10 மற்றும் எம்.எஸ்.ஆபீஸ் 2003 அல்லது 2007 வெர்ஷன் பிரண்ட் பேஜ்கள் 5 ஆகியவை வாங்குதல்.

### 3. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் பிரிவு அலுவலக கட்டிடம் கட்டுதல்.

### 4. அண்ணா மேலாண்மை நிலையம்

அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு அதிவேக ஸ்கேனர் (சமீபத்திய வடிவம்), பிரிண்டர் - (லேசர் ஜெட் கலர்) 1600 தொடர் அல்லது சமீபத்திய வடிவம், சமூக அறிவியல் மென்பொருளுக்கான புள்ளிகள் கையேடு (SPSS) மென்பொருள் - 15.0 வடிவ Modules - 4, வீடியோ கான்பரன்சிங் ஸ்டுடியோ உள்ளமைப்பு வசதிகள், மின் புகைப்பட முறை (எல்.சி.டி, புரொஜெக்டர்) மற்றும் திரை, உணவு அறைகளுக்கான அறைகலன்கள் மற்றும் நூலகத்திற்கான புத்தகங்கள் வாங்குதல்.

### 5. அ மற்றும் ஆ பிரிவு அடிப்படைப் பயிற்சி நிலையம்

அ மற்றும் ஆ பிரிவு அடிப்படைப் பயிற்சி நிலையத்தின் வகுப்பறைகள் மற்றும் அலுவலகத்திற்காக மேசைகள், நாற்காலிகள் மற்றும் நிலைப்பேழைகள் வாங்குதல்.

### 6. அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வு பயிற்சி மையம்

அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வு பயிற்சி மையத்திற்கு கணினிகள் - 10, 5 KVA தடையில்லா மின் வழங்கி (UPS), வருடி (ஸ்கேனர்) மற்றும் உள்ளக இணையவலை (LAN Network) மற்றும் கணினி அறைகலன்கள் வாங்குதல்.

### 7. பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையம்

வகுப்பறைகளுக்கு கணினி மற்றும் அறைகலன்கள், விடுதிக்கான ஜெனரேட்டர், கணினிக் கூடத்திற்கான கம்பிவடம், சுற்றுச்சுவர் எழுப்புதல் மற்றும் செயல்திறன் உறுப்பினர் மற்றும் பணியாளர் இல்லங்களில் சிறப்பு பழுதுபார்த்தல் .

**ஆற்காடு நா. வீராசாமி**
**மின்சாரத் துறை அமைச்சர்**